# இலங்கைத் தமிழர்களின் அரசியலை விளங்கிக் கொள்ளல்

அம்பலவாணர் சிவராஜா

320
சிவரா
SLIPR

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர்களின் அரசியலை விளங்கிக் கொள்ளல்

**அம்பலவாணர் சிவராஜா**
(பேராசிரியர், அரசறிவியல்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)

**கொழும்புத் தமிழ்ச் சங்கம்**
7, 57வது ஒழுங்கை,
கொழும்பு - 6.
இலங்கை.
2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசி 2002
இலங்கைத் தமிழர்களின் அரசியலை விளங்கிக் கொள்ளல்
அம்பலவாணர் சிவராஜா
வெளியீடு — கொழும்புத் தமிழ்ச் சங்கம்
விலை — ரூபா 50.00

February 2002
Understanding Sri Lankan Tamil's Politics
Prof. A. Sivarajah
Published by Colombo Tamil Sangam
Price : Rs 50.00

தமிழ்ச் சங்க வெளியீடுகளிலுள்ள கருத்துக்கள் அவ்வவ் ஆசிரியர்களுடையவை.

# I

# அறிமுகம்

இலங்கைத் தமிழர்களின் அரசியலை விளங்கிக் கொள்வதாயின் ஆரம்பத்திலேயே இரண்டு பிரதான தெளிவின்மைகளை அல்லது முக்கியமான அம்சங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளுதல் அவசியமாகும். அவை:

(i) இலங்கைத் தமிழர் என்பவர் யார் என்பதையிட்டு ஒரு தெளிவான நிலைப்பாட்டினை ஏற்படுத்தல்.

(ii) ஓர் இனக் குழுமத்தின் அரசியலை விளங்கிக் கொள்வதற்கு எந்த அணுகு முறையினை அல்லது எண்ணக் கருவினைப் பயன்படுத்தலாம் என்று தீர்மானித்தல்.

இவற்றுள் முதலாவதைப் பற்றி ஏற்கனவே பலர் தெளிவுபடுத்தியுள்ளார்கள் என்பதோடு தற்காலத்தில் இது பற்றி ஒரு கருத்தொருமைப்பாடும் ஏற்பட்டு வருகின்றது. 1984இல் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய ஒரு கட்டுரையில் "இலங்கையின் வரலாற்றிலும் அரசியலிலும் இலங்கையில் வாழும் தமிழர்கள் இலங்கைத் தமிழர் எனவும், இந்தியத் தமிழர் எனவும் இரு முக்கிய பிரிவுகளாய் காணப்படுவது நன்கு தெரிந்ததாகும்"[1] எனக் குறிப்பிட்டு "இலங்கைத் தமிழர்களின் சமூக ஒழுங்கமைப்பை நோக்கும்போது இனரீதியான ஒருமைத்தன்மை, புவியியல், பொருளியல் ஒழுங்கமைப்பு, சமூகக் கட்டுமானம், அபிவிருத்திமட்டம் என்ற அம்சங்களின் அடிப்படையில் அவர்களைப் பின்வருமாறு இரு தெளிவான குழுக்களாக வகுக்கலாம்" எனக் குறிப்பிடுகின்றார்:[2]

(அ) கிழக்கு மாகாணத் தமிழர். ( இவர்கள் பெரும்பாலும் மட்டக்களப்புத் தமிழர் எனக் குறிக்கப்படுபவர்.)

(ஆ) வட மாகாணத் தமிழர்கள். (இவர்கள் (அ) வன்னி, மன்னார் மாவட்டத் தமிழர்கள் என்றும் (ஆ) யாழ்ப்பாணத் தமிழர்கள் என்றும் மேலும் இரு பிரிவுகளாக உள்ளனர்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே வேளை 2000ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கொழும்புத் தமிழ் சங்கத்தில் ஆற்றிய உரையொன்றில் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் "... இலங்கைத் தமிழர் என்பது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் மக்களையே பிரதானமாகக் கருதவேண்டும் என்ற மனப்பாங்கினை விடுத்து பிரதேச வேறுபாடுகளை அங்கீகரித்து, பன்மைப்பாட்டினுள் ஒற்றுமை காணும் மனப்பாங்கினை வளர்த்தல் வேண்டும்"[3] என்று குறிப்பிட்டு, இலங்கைத் தமிழ் அலகினுள் பின்வரும் உபபண்பாட்டுக் கூறுகளையும் சேர்த்தல் வேண்டும் என்றார்:[4]

1. மட்டக்களப்பு
2. திருகோணமலை மூதூர் மாவட்டம்
3. வன்னிப் பகுதி
4. யாழ்ப்பாணம்
5. மன்னார்
6. வடமேல் மாகாணம் - குறிப்பாக புத்தளம்
7. கொழும்பு
8. தென்மாகாணம்
9. மலையகம்

இந்த ஆய்வில் மேற்கண்ட உப பண்பாட்டுக் கூறுகளையும் சேர்த்தே இலங்கைத் தமிழர் என்ற பதம் பயன்படுத்தப்படுகின்றது.

அடுத்ததாக இலங்கைத் தமிழர்களின் அரசியலை விளங்கிக் கொள்வதற்கு எத்தகைய அணுகு முறையைப் பின்பற்றுதல் வேண்டும் என்பதாகும். ஓர் இனக் குழுமத்தின் அரசியலை நிர்ணயிப்பதில் அக்குழு-மத்தின் சமூக, பொருளாதார காரணிகள் இன்றியமையாதனவாகும். ஆகவே, சமூகத்தையும் அரசியலையும் இணைத்து நோக்கும் அரசியல் சமூகவியல் அணுகுமுறையே இதற்குப் பொருத்தமானதாகத் தெரிகின்றது. அதிலும் குறிப்பாக மத்திய வகுப்பிலிருந்து தோன்றும் உயர்ந்தோர் குழாம் அரசியலில் வகிக்கும் பங்கு முக்கியமானதாகும். மேலும், சமூக பொருளாதாரச் சூழ்நிலை அரசியலை நிர்ணயிப்பதில் முக்கியத்துவம் பெறுகின்றன என்பதை ஏற்றுக்கொண்டால், இலங்கைத் தமிழரின் அரசியலை விளங்கிக் கொள்-வதற்கு அவர்களின் அரசியலைக் கால கட்டங்களாக வகுத்து விளங்கிக் கொள்ளுதல் அவசியமானதாகும். அந்த வகையில் இவ்வாய்வு பின்வரும் பகுதிகளாக பிரிக்கப்படும் :

1. யாழ்ப்பாண இராச்சியத்தின் கீழ் இலங்கைத் தமிழர்களின் அரசியல்.



2. போர்த்துக்கேயரின் ஆட்சியின் கீழ் இலங்கைத் தமிழர்களின் அரசியல்.
3. டச்சுக்காரரின் ஆட்சியின் கீழ் இலங்கைத் தமிழர்களின் அரசியல்.
4. பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் இலங்கைத் தமிழர்களின் அரசியல்.
5. சுதந்திர இலங்கையில் இலங்கைத் தமிழர்களின் அரசியல்.
   (அ) 1948 முதல் 1976 வரை.
   (ஆ) 1976 தொடக்கம் சமகாலம் வரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# II

# ஆய்வின் கோட்பாட்டு அடிப்படை

## (அ) அரசியல் சமூகவியல் பற்றிய எண்ணக்கருவும் உயர்ந்தோர் குழு பற்றிய விளக்கமும்

மாக்சும் வெபரும் ஒரு சமூகத்தின் தொடர்பில் மட்டும்தான் அரசியலை விளக்கவும் விளங்கிக் கொள்ளவும் முடியும் என்பதில் ஒரே கருத்தினைக் கொண்டவர்களாக இருந்தனர். அந்தத் தொடர்பு ஆழமான வரலாற்றுத் தன்மை கொண்டதாகும்.[5]

அரசியல் சமூகவியலின் கடமை அரசியலுக்கும் சமூகவியலுக்குமிடையிலான தொடர்புகளை விண்டு காட்டுவதாகும். அத்தோடு சமூகத்துக்கும் அரசியல் ஸ்தாபனங்களுக்குமிடையிலான தொடர்புகளையும், சமூகத்துக்கும் அரசியல் நடத்தைக்குமிடையிலான தொடர்புகளையும் விளக்குவதுமாகும்.[6] எந்தவொரு சமூகத்தையும் விளங்கிக்கொள்வதாயின் அதன் அரசியலை விளங்கிக்கொள்ளல் வேண்டும். எந்தவொரு சமூகத்தினதும் அரசியலை விளங்கிக் கொள்வதாயின் அதன் சமூகத்தினை விளங்கிக் கொள்ள வேண்டும்.[7] இறுதியாக அரசியல் சமூகவியலின் மையம் சமூக கட்டமைவுகளையும் அரசியலையும் விளங்கிக் கொள்வதில் பங்களிக்கும் நடத்தையை நோக்கியதாகும். இது நான்கு பிரதான விடயங்களை விளக்குவதோடு சம்பந்தப்படுகின்றது:

(i) அரசின் பங்கும் அதிகாரத்தைச் செயற்படுத்துவதும்.

(ii) எவ்வாறு அரசியல் நடத்தை சமூகத்தோடு தொடர்புபடுகின்றது.

(iii) எவ்வாறு பெறுமதிகள் சமூகத்தின் அரசியலோடு சம்பந்தப்படுகின்றன.

(iv) சமூகங்கள் எவ்வாறு மாறுகின்றன.



அரசியல் சமூகவியல் என உரிமை கொண்டாடும் பரப்பின் வேறுபடும் அம்சங்களை விளக்கி அபிவிருத்தி செய்யலாம். உ-ம் : அதிகாரப் பங்கீடு பற்றிய உயர்ந்தோர் குழாம் கோட்பாடும் பன்மையியல் கோட்பாடும்.[8]

## (ஆ) உயர்ந்தோர் குழாம் பற்றிய எண்ணக்கரு

சொல்லிலக்கண முறைப்படி நோக்கும்போது உயர்ந்தோர் குழாம் (Elite) என்பது இலத்தின் மொழியில் இருந்துதான் பெறப்பட்டது.[9] தெரிவு செய்தல் என்பதே அதன் பொருளாகும். 14ஆம் நூற்றாண்டளவில் பிரெஞ்சு மொழியில் அது பயன்பாட்டிற்கு வந்தது. முதலில் இராணுவத்தில் ஆட்களைத் தெரிவு செய்வதற்காக அது பயன்படுத்தப்பட்டது. 18ஆம் நூற்றாண்டளவில் பொதுவான கருத்தில் இப்பதம் பயன்பாட்டிற்கு வந்தது.[10] படிப்படியாக இப்பதம் தெரிவுசெய்தல் என்பதிலிருந்து துறை போந்தவர்கள் என்ற கருத்துக்கு மாறியது. சமூகவியலில் பரட்டோ(Pareto) தான் உயர்ந்தோர் குழாம் என்ற பதத்தினை உருவாக்கியவராவார். பரட்டோவுக்கு நடைமுறையில் உயர்ந்தோர் குழாமும் வர்க்கமும் ஒரே கருத்துடையனவாகவே இருந்தது. உயர்ந்தோர்குழாம் என்ற பதம் தனிப்பட்ட ஒருவரையோ அல்லது இரண்டு பேர்களையோ குறிப்பிடப் பயன்படுத்தப்படவில்லை. அது எப்போதும் பல பேர்களைக் குறிக்கவே பயன்படுத்தப்பட்டது. அத்தகைய குழாம் சமூகத்தில் பிரத்தியேகமாக வெளிப்படுவதோடு அதற்குரிய தகுதிகளும் நுட்பங்களும் அதனை உயர்ந்தோர் குழுவுக்குரிய தன்மையுடையதாக்குகின்றன. இதற்கு உயர் அந்தஸ்து என்ற பதமும் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றது. மிக உயர்ந்த தகுதியுள்ள குறிப்பிட்ட வர்க்க மக்கள் உயர்ந்தோர் குழாம் என அழைக்கப்படுகின்றனர்.[11]

ஈஸ்டன் ரொத்வெல் (Eastern Rothwell) என்பார் படைமுறையாக்கலைப் பொறுத்து உயர்ந்தோர் குழாம்என்ற எண்ணக்கரு சமூகத்தில் உயர்பதவிகளை வகிப்போரையே குறிக்கிறது என்றும், தாம் மற்றவர்களை விட உயர்ந்தவர்கள் என்ற எண்ணமே உயர்ந்தோர்குழாம் என்ற பதத்தினை அடையாளம் காண வழிவகுத்துள்ளதுடன் ஒரு குறிப்பிட்ட உயர்ந்தோர் குழுவே அரசியல் ரீதியில் உயர்வானது அது ஆட்சி செலுத்தும் உயர்ந்தோர் குழுவாகும் என்றும், இது நேரடியாகவோ மறைமுகமாகவோ அரசாங்கத்தில் குறிப்பிடத்தக்க வகையில் பங்கு வகிப்பவர்களையும் ஆட்சி செய்யாத மற்றவர்களையும் உள்ளடக்கியதாகும் என்றும் குறிப்பிடுவார்.[12]

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் அரசியல் தலைமைத்துவக் குழுவினரை உயர்ந்தோர் குழுவினருடன் அடையாளம் காண்கின்றனர். இந் நாடுகளில் ஆரம்பத்தில் அரசியல் அதிகாரம் (மத்திய வகுப்பு ஒன்றில்லாதபோது) உள்ளூர் நிலச்சுவாந்தர்களின் கைகளிலேயே தங்கியிருந்தது. நகரங்களில் மத்திய வகுப்பு மெதுவாக வளர்ச்சியடைந்தது. அபிவிருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்து வரும் நாடுகளில் புதிய உயர்ந்தோர் குழாம் அரசியல் தலைவர்களைக் கொண்டதாகவும், பெருமளவுக்கு மத்திய வகுப்பிலிருந்து வந்தவர்களாகவும், உயர்ந்தளவு கல்வியறிவு உடையவர்களாகவும் காணப்பட்டனர்.

## (இ) ஆய்வின் எடுகோள்

வேளாளர்களின் நீண்டகால உயர்ந்தோர் குழாம் மரபு. அதாவது இலங்கைத் தமிழர்களின் மனதில் தமிழர் விடுதலைக்கூட்டணி இலங்கைத் தமிழர் உரிமைகளைப் பேணிக் காப்பது என்று பேசும்போது அவர்களது மனதில் இருந்தது வேளாளர் உரிமைகளும் கலாச்சாரமுமே.

# III

# இலங்கைத் தமிழரின் அரசியல்

## 1. யாழ்ப்பாண இராச்சியத்தின் கீழ் இலங்கைத் தமிழர்களின் அரசியல்

தென்னிந்திய திராவிட அரசுகளின் அரசியல் ஒழுங்கமைப்புக்களை ஒத்ததாகவே யாழ்ப்பாண இராச்சியத்தின் அரசியல் ஒழுங்கமைப்பு ஆக்கப்பட்டது. குடாநாடு நான்கு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. அவை: வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி. மன்னாருக்கும் திருகோணமலைக்குமிடையிலுள்ள பிரதான நிலங்களும் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன.[13] கிராமத்தின் விவகாரங்களைக் கிராமத்தலைமைகாரர் என்ற உத்தியோகத்தரே கவனித்தார். பல தலைமைக்காரர்களை ஒரு அதிகாரி மேற்பார்வை செய்தார். ஒவ்வொரு சாதிக் குழுவினதும் தலைவர்கள் அச்சாதியின் விவகாரங்களைக் கவனித்ததினால் அவரே அச்சாதிக்குழு கடமைகளை ஆற்றுவதற்குப் பொறுப்பு வகித்தார். பண்டாரப் பிள்ளைகள் என அழைக்கப்பட்ட வருமான உத்தியோகத்தர்கள் சுற்று வட்டமாகச் சென்று வரிகளை மதிப்பிட்டும் சேகரித்தும் வந்தனர். அதன் நான்கு நூற்றாண்டு கால இருப்பின்போது வடக்கு இராச்சியம் செழிப்பான வர்த்தகத்தின் இருப்பிடமாயிருந்தது. அதற்குத் தமிழர்களின் வர்த்தக மரபு உதவியாக இருந்தது. புதிய துறைமுகங்கள் உருவாக்கப்பட்டன. பழையன பெருப்பிக்கப்பட்டன.[14] இக்காலத்தில் யாழ்ப்பாணம் ஒரு வர்த்தக நிலையமாக அபிவிருத்தியடைந்து ஊர்காவற்றுறை கப்பல் கட்டும் முக்கியமான துறைமுகமாகியது. மாந்தோட்டம் தொடர்ந்தும் பிரதான துறைமுகமாக இருந்தது. திருகோணமலை தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டது. முல்லைத்தீவும் பயன்பாட்டுக்கு வந்தது. தமிழ் வர்த்தகர்கள் சிங்களப் பகுதிகளிலுள்ள துறைமுகங்களிலும் வர்த்தகத்தில் ஈடுபட்டனர். உதாரணம் - காலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. போர்த்துக்கேயர் ஆட்சியின் கீழ் இலங்கைத் தமிழர்களின் அரசியல்

யாழ்ப்பாண இராச்சியத்தினைப் போர்த்துக்கேயர் கைப்பற்றியமை அரசாங்க ஆட்சி முறைகளில் மாபெரும் மாற்றங்கள் எதனையும் ஏற்படுத்த-வில்லை. கோட்டை இராச்சியத்தைப் போலவே உள்ளூர் நிர்வாக சட்ட மாதிரிகளையும், வரி அறவிடும் முறைகளையும் தொடர்ந்தும் பராமரித்தனர். ஆனால், சில புதிய பதவிகளை உருவாக்கினர். Collectors Race Bedores என்பதும் உருவாக்கப்பட்டது. இவரே நில வாடகை, வரிகள் என்பவற்றை ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள கிராமங்களிலும் அறிவிடுபவராவார். தமிழ் அரசர்களின் கீழ் இவை அதிகார் என அழைக்கப்படுபவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இவர்களை முதலியார்மார் மேற்பார்வை செய்தனர். இம்முறை போர்த்துக்கேயரின் கீழும் தொடர்ந்திருக்கலாம். ஆரம்பத்தில் தமிழர்களே சில பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.[15] ஆனால், ஒரு போர்த்துக்கேய அதிகாரி முதலியார்களும் அதிகார்மார்களும் உண்மையான வருமான கணக்குகளை மறைக்கிறார்கள் என நம்பியதால் அவர்களின் இடத்துக்குப் போர்த்துக்கேய உத்தியோகத்தர்களை நியமித்-தான்.

முன்னரே குறிப்பிட்டவாறு உள்ளூர் உயர் வரிசை கிராம உத்தி-யோகத்தர்கள் அவ்வாறே பேணப்பட்டபோதிலும் ஒரு வர்க்கம் - முதலி-யார்மார் - கிட்டத்தட்ட முழுமையாக ஒழிக்கப்பட்டனர்.

தமிழ் முதலியார்மார் குடாநாட்டு பிரஜைகள் மீது கணிசமான செல்வாக்குச் செலுத்தி வந்தனர். இதற்கு அடுத்த அதிகார் பதவி அதன் அதிகாரத்தையும் செல்வாக்கையும் இழந்தது.

போர்த்துக்கேய உத்தியோகத்தர்கள் முதலியார்மார்களுக்-கிடையிலான பிரதான தொடர்பாகவும் கிராம உத்தியோகத்தவர்களை மேற்பார்வை செய்யும் அதிகாரத்தையும் கொண்டிருந்தனர். அடுத்த பதவி தாசில்தார் அல்லது விதானை ஆகும். விதானை சிங்கள பிரதேசங்களில் விதான என்ற பதவியின் சகபாடியாக இருந்தது. இத்தோடு மற்றைய பதவிகளும் இருந்தன (உ-ம்: உடையார்).[16] நிர்வாக வருமான தேவைக்காக யாழ்ப்பாண இராச்சியம் தீவுகளையும் உள்ளடக்கியிருந்ததுடன் வன்னிப் பிரதேசத்தையும் உள்ளடக்கியிருந்தது. திருகோணமலையிலிருந்து மாந்தோட்டை வரையுள்ள பிரதேசங்களும், மன்னார் தீவும் பின்னர் சேர்த்துக்கொள்ளப்பட்டன. அத்தோடு மாந்தோட்டை, மாசில பத்து, செட்டிகுளத்தின் சில பகுதிகள் என்பனவும் போர்த்துக்கேய முடியின் நிர்வாகத்துக்குட்பட்டிருந்தன.



## 3. டச்சுக்காரர் ஆட்சியின் கீழ் இலங்கைத் தமிழர்களின் அரசியல்

தீவில் பின்பற்றப்படவேண்டிய பொருளாதாரக் கொள்கையின் பொதுவான இலக்குக்கு ஏற்பவே டச்சுக்காரரின் நிர்வாகக் கொள்கை செயற்படுத்தப்பட்டது. நாடு வழங்கக்கூடிய சகல நன்மையையும் அறுவடை செய்வதே அதன் நோக்கமாகும். ஆகவே, அவர்கள் மரபு ரீதியான ஸ்தாபனங்களை இந்த இலக்குக்காகப் பயன்படுத்த விரும்பினர். உயர்ந்த மட்டத்தில் முக்கியமான நிர்வாகப் பதவிகளை டச்சு உத்தியோகத்தர்களே வகித்தார்கள். நிர்வாகக் கட்டமைவு பரந்தளவில் மூன்று குழுக்களைக் கொண்டிருந்தது - வர்த்தகம், சிவில், இராணுவம்.[17] உள்ளூர் நிர்வாக முறைக்கு திசாவ என்ற பதவி பயனுள்ளதென டச்சுக்காரர் உணர்ந்தனர். இவர்கள் மாகாண ஆளுனர்கள் போன்றவர்கள். இவர்களுக்கு பொருளாதார, நிதித்துறைக் கடமைகள் இருந்தன. டச்சுக்காரர் சிவில் பதவிகளை தொடர்ந்தும் வைத்திருந்தனர். ஆனால், தமது ஆட்களையே தெரிவு செய்தனர். பின்வரும் மூன்று நிர்வாக உப பிரிவுகளுக்கும் ஒரு திசாவ இருந்தார் : கொழும்பு, யாழ்ப்பாணம், காலி.[17]

## 4. பிரித்தானியர் ஆட்சியின் கீழ் இலங்கைத் தமிழர்களின் அரசியல்

பிரித்தானியர் ஆட்சியின் ஆரம்பத்தில் இலங்கைத் தமிழர்களின் பொருளாதார நடவடிக்கைகள் அவர்களிடையே செல்வம் சேர்வதற்கு வழிவகுத்தது. [17] யாழ்ப்பாணக் குடா நாட்டில் புகையிலை, நெல் உற்பத்தி என்பனவே பிரதான தொழில்களாக இருந்தன. இக்காலப்பகுதியில் புகையிலை உற்பத்தி தொடர்ந்து அபிவிருத்தி அடைந்து வந்தது. இதற்குக் காரணம் யாழ்ப்பாணச் சுருட்டுக்கு இலங்கையின் மேற்கு தெற்குப் பகுதிகளில் மாத்திரமல்லாமல் இந்தியாவின் திருவாங்கூர், கொச்சின் பகுதிகளிலும் பெரும் கிராக்கி இருந்ததே. இந்து சாதனம் குறிப்பிட்டது போல் இலங்கைத் தீவின் செழிப்புக்குக் கோப்பி எப்படிக் காரணமோ அவ்வாறே யாழ்ப்பாணக் குடாநாட்டுச் செழிப்புக்குப் புகையிலை காரணமாயிற்று.[18]

பொருளாதார இலாபமற்ற நிலவுடமை காணப்பட்ட குடாநாட்டில் சனத்தொகை அடர்த்தியாகவுள்ள கிராமங்களின் தீவிரமான பிரச்சினை-களை பிரித்தானியர் ஏற்படுத்திய மாற்றங்கள் தீர்க்கவில்லை. ஆகவே, கல்வியினூடாகக் கிடைக்கும் வாய்ப்புகளைத் தமிழர் பயன்படுத்திக்-கொண்டனர்.[19] கல்வி பெறுதல், விசேடமாக ஆங்கிலக் கல்வியும் உயர் கல்வியும் பெறுதல் குடாநாட்டின் பொருளாதார வளர்ச்சியின்மைக்கு மாற்றாகியது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பொதுவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க நடவடிக்கைகள் அதிகரித்தமையால் பல்வேறு அரசாங்க திணைக்களங்கள் எழுச்சியடைந்தன. (உ-ம் : பொலிஸ் திணைக்களம் (1865), அளவை, பொதுச் சேவை திணைக்களம் (1870), நீர்ப்பாசன சபை (1887), வன பரிபாலன திணைக்களம் (1889), நிலக்குடியமர்த்தல் திணைக்களம் (1890)[20].

இத்திணைக்களங்கள் எல்லாவற்றுக்கும் எழுது வினைஞர் உத்தியோகத்தர்கள் தேவைப்பட்டனர். 1868இல் 1710 பதவிகளில் 794 பதவிகள் இலங்கையருக்கு வழங்கப்பட்டன. அத்தகைய எழுதுவினைஞர் பதவிகளில் இலங்கைத் தமிழர் தமது சிங்கள சக பாடிகளின் பதவிகளுக்குச் சமமாக இடம் பெற்றனர். [21]

இலங்கையில் பிரித்தானியர் ஆட்சியின் போதுதான் இலங்கைக்குப் பல அரசியல் சீர்திருத்தங்கள் வழங்கப்பட்டன. 1802இல் பிரித்தானிய முடியினால் தெரிவு செய்யப்பட்ட தேசாதிபதியினால் இலங்கை நிர்வகிக்கப்பட்டது. இம்முறை 1829இல் பிரித்தானியாவால் தெரிவு செய்யப்பட்ட கோல்புறூக் கமெரன் ஆணைக்குழுவின் சிபார்சுகளின் படி சட்ட நிரூபண சபை, சட்ட நிர்வாகசபை என்பன உருவாக்கப்படும் வரை தொடர்ந்திருந்தது. மேற்சொன்ன சிபார்சுகளின் அடிப்படையில் 6 உத்தியோகத்தர்களைக் கொண்ட ஒரு சட்ட நிர்வாக சபையும், 15 அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு சட்ட நிரூபண சபையும் உருவாக்கப்பட்டன. பின்வருவோர் சட்ட நிரூபண சபையின் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்களாக இருந்தனர் :

| | | |
|---|---|---|
| ஐரோப்பியர் | - | 03 |
| சிங்களவர் | - | 01 |
| தமிழர் | - | 01 |
| பறங்கியர் | - | 01 |

பல்வேறு காரணங்களுக்காகவும் வசதிகளுக்காகவும் பிரித்தானிய தேசாதிபதிகள் சிங்கள தமிழ்ச் சமுதாயங்களில் தனியொரு முன்னணி நிலை வகிக்கும் குடும்பத்தில் இருந்து சட்ட நிரூபண சபையில் சேவையாற்ற பிரதிநிதிகளைத் தெரிவு செய்தனர்.[22] அதனால், இக்காலப் பகுதியில் இலங்கைத் தமிழர்களின் பிரதிநிதிகள் தனியொரு உயர்ந்தோர் குழுவான கொழும்புத் தமிழ்க் குடும்பத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் சகல இலங்கைத் தமிழர்கள் சார்பிலும் சட்ட நிரூபண சபையில் பேசினர். கோல்புறூக் கமெரன் சீர்திருத்தங்களின் கீழ் அமைந்த முதலாவது சட்ட நிரூபண சபை அங்கத்தவராகப் பிரபல்யம் வாய்ந்த இராமநாதன் அருணாசலம் குடும்பத்தைச் சேர்ந்த ஆறுமுகத்தான் பிள்ளை குமாரசுவாமி முதலியார் (1783-1836) நியமிக்கப்பட்டார்.[23] ஆர்வம் மிகுந்த பிரித்தானிய ஒத்துழைப்பாளராக இருந்த ஆறுமுகத்தான் பிள்ளை தங்கப்பதக்கமும் சங்கிலியும் தங்க முலாம் பூசிய பிரம்பும் பிரித்தானியரிடமிருந்து வெகுமதியாகப் பெற்றுக்கொண்டவராவார். குமாரசுவாமி முதலியார் இறந்ததின் பின்னர் அவரது இடத்துக்கு வெளியார் ஒருவரான கொழும்புத் தமிழ்ச்



செட்டியான சைமன் காசிச் செட்டி (1845-1938) நியமிக்கப்பட்டார். இந்த ஆசனம் பின்னர் குமாரசுவாமி முதலியாரின் மகனான முத்துக்குமார சுவாமியை வந்தடைந்தது. இவர் பிரித்தானிய பிரதம மந்திரியாகவிருந்த டிசரேலியின் நண்பராவார். இவர் 1862ல் இவரது மாமனாராகிய கேட் முதலியார் எதிர்மான சிங்கத்தின் இடத்துக்கு நியமிக்கப்பட்டதோடு 1861வரை சேவையாற்றினார். முத்துக்குமாரசுவாமி சட்டநிரூபண சபையின் நடைமுறைகளில் பல மாற்றங்களை அறிமுகப்படுத்த முயற்சித்தார். ஆனால், அம் முயற்சிகள் அவர் பிரதிநிதித்துவப்படுத்திய தொகுதியினருடன் சம்பந்தப்பட்டவையாக இருக்கவில்லை. இவை எல்லாவற்றுக்கும் மத்தியில் பிரித்தானிய ஆட்சி பற்றிய தெளிவற்ற அவரது நிலைப்பாட்டிற்கு மத்தியிலும் குமாரசுவாமி அவர்கள் ஒரு தேசியவாதியாகவே மதிக்கப்பட்டார்.[23]

சட்டநிரூபண சபைக்கு குமாரசுவாமியினைத் தொடர்ந்து பதவிக்கு வந்தவர் அவரது மருமகனான பொன்னம்பலம் இராமநாதன் ஆவார். 1879இல் அவர் நியமிக்கப்பட்டபோது 28 வயதுடையவராகவே இருந்தார். சட்ட சபையில் இராமநாதன் ஆரம்பகாலத்தில் காலனித்துவ அரசாங்கத்தின் கண்டனக்காரராகவே செயற்பட்டார். இளைஞனாக இருந்தபோதும் 1886இல் சபையின் முதிர்ந்த உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவரானார்.

1910இல் அறிமுகம் செய்யப்பட்ட மக்கலம் சீர்திருத்தத்தின் கீழ் கல்விகற்ற இலங்கையர்களுக்காக ஓர் ஆசனம் வழங்கப்பட்டது. இதற்காக நடந்த தேர்தலில் மார்க்கஸ் பெர்னாண்டோவை இராமநாதன் தோற்கடித்து வெற்றி பெற்றார். இராமநாதனைத் தொடர்ந்து பதவியேற்றவர் அவரது தம்பியாரான சேர்.பொன்னம்பலம் அருணாசலம் ஆவார்.

ஆகவே, பிரித்தானியர் ஆட்சியின் கீழ் இலங்கைத் தமிழர்களின் அரசியலை ஆக்கிரமித்தோர் குறிப்பிட்ட சாதியினையும் குடும்பத்தினையும் சேர்ந்த கல்விகற்ற உயர்ந்தோர் குழு என்பது தெளிவாகின்றது. இவ்வாறு ஒரு குறிப்பிட்ட குடும்பத்தினர் எவ்வாறு செல்வாக்குப்பெற முடிந்தது என்பதை இக் கட்டத்தில் விளக்குதல் பொருத்தமானதாகும்.

இலங்கைத் தமிழர்களின் சாதிமுறை அடிப்படையில் தென்னிந்திய திராவிட முறையை ஒத்ததாக இருந்தாலும் இலங்கையில் பிராமணர்களை விட எண்ணிக்கையில் வேளாளர் அதிகமானவர்களாக இருந்தனர். போர்த்துக்கேயர் வருகைக்கு முன்பு முன்னணி விவசாயிகளாக இருந்த வேளாளர்களையே தமிழ் இராச்சியம் அடிப்படையாகக் கொண்டிருந்தது. வேளாளரின் அரசியல் பொருளாதார உயர்ச்சி நவீன காலம் வரையும் தொடர்ந்து வந்தது. தமிழ்ச் சமூக முறையில் வேளாளர் கிராமங்களை ஆக்கிரமித்ததோடு அதன் விவகாரங்களை முகாமைத்துவம் செய்தும் வந்தனர். இது போர்த்துக்கேயர், டச்சுக்காரர், பிரித்தானியர் காலம் வரை மட்டுமல்லாது அதன் பின்னரும் தொடர்ந்தது.

வட இலங்கைத் தமிழரின் சொத்துக்கான உரிமையினை ஆட்சி செய்யும் தேச வழமைச் சட்டம் இன்றும் நடைமுறையிலுள்ளது. இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பரையாகக் கிடைத்த சொத்து, திருமணம் மூலம் கிடைத்த சொத்து ஆகிய இரண்டையும் ஆட்சி செய்கின்றது. தேச வழமை மூன்று விதமான சொத்துக்களை அங்கீகரிக்கின்றது அவையாவன: சீதனம்: திருமணத்தின்போது ஒரு பெண் பெறும் சொத்து; முதுசொத்து: ஆண் தனது பெற்றோரிடமிருந்து பெறும் சொத்து; தேடிய தேட்டம் : திருமணம் செய்த பின் இருவரும் பெறும் சொத்து. 18ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கைத் தமிழர்களிடையே வழக்கத்திலிருந்த மரபுகள் வழக்கங்களின் தொகுப்பே தேசவழமையாகும்.[24] இலங்கைத் தமிழர்களின் வரலாற்றில் இது ஒரு முக்கியமான ஆவணம் ஆகும். இது டச்சு அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தேச வழமை ஒரு குடும்பத்தில் பரம்பரையாக அல்லது ஒரு குடும்பத்தினூடாக அல்லது மற்றைய எந்த வழிகளிலும் வரும் சொத்தினைப் பாதுகாப்பது பற்றியதாகும்.

இலங்கைத் தமிழர்கள் குறிப்பாக வேளாளர் சாதி யாழ்ப்பாணக் குடாநாட்டில் தேச வழமையை நடைமுறைப்படுத்துவதுபோல் மட்டக்களப்பு மக்கள் தமது முக்குவர் சட்டத்தை தமது சிவில் உரிமைகளை அல்லது குடியுரிமைகளைப் பாதுகாக்க நடைமுறைப்டுத்துகின்றனர்.[25]

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் குறிப்பிட்டது போல் சமூகத்தில் மக்கள் நடத்தைக்கான முழுமையான விதிகளாக இச்சட்டங்களை விளங்கிக்கொள்வதனால் இவை ஆக்கிரமிப்புச் செலுத்தும் குழுவின் விருப்பத்தை வெளிப்டுத்துவதோடு சமூகத் தொடர்புகளையும் பொது ஒழுங்குகளையும் ஆக்கிரமிக்கும் குழுவிற்கு வாய்ப்பளிக்கத் தக்க வகையில் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டதாகும்.[26] யாழ்ப்பாணத்தின் தேசவழமைச் சட்டங்களும் வழக்காறுகளும், மட்டக்களப்பின் முக்குவர் சட்டங்களும் வழக்காறுகளும் யாழ்ப்பாண வேளாளர்களையும் மட்டக்களப்பு முக்குவர்களையும் பாதுகாக்க எழுந்தவையாகும். நவீன சமூக மாற்றங்களுக்கு மத்தியிலும் யாழ்ப்பாணத்தினதும் மட்டக்களப்பினதும் சமூகக்கட்டமைவுகள் அடிப்படையில் இரு ஆக்கிரமிப்புச் செலுத்தும் சாதிகள் மீது தங்கியுள்ளன. ஆரம்பத்தில் அறிமுகம் செய்யப்பட்டதிலிருந்து நவீனகாலம் வரைக்கும் இந்த வழக்காற்றுச் சட்டங்களின் தாக்கம் காரணமாக இவ்விரு ஆக்கிரமிப்பு மிக்க சாதிகளும் பலம் வாய்ந்த குழுக்களாக, நிலவுடமையாளர்களாக, பின்னர் தமிழ்ச் சமூகத்தின் உயர்ந்தோர் குழாம் வர்க்கமாக சமூகத்தினைக் கட்டுப்படுத்தின.[27]

மேற்சொன்ன விளக்கம் எவ்வாறு இலங்கைத் தமிழர்களுள் குறிப்பாக வடக்கே யாழ்ப்பாணத் தமிழர்களுள் சில குறிப்பிட்ட குடும்பங்கள் தமிழரின் ஆட்சியை ஆக்கிரமிக்க உதவின என்பதை காட்டுகின்றது. உயர்சாதி, சொத்துடைமை, கல்வி என்ற மூன்றினையும் பெற்ற குடும்பங்கள் அரசியலிலும் ஆக்கிரமிப்புச் செலுத்த முடிந்தன.



இவ்வாறான உயர்ந்தோர் குழாம் ஆக்கிரமிப்புச் செலுத்தும் அரசியல் பிரித்தானியர் ஆட்சியின் முடிவு வரைக்கும் தொடர்ந்ததா? சுதந்திரத்தின் பின்னர் மாறியதா? என்பதே எமக்கு முன்னுள்ள கேள்வியாகும்.

இத்தகைய தமிழ் உயர்ந்தோர் குழாமின் அரசியலில் முதலில் மாற்றங்களை ஏற்படுத்தியவர்கள் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசைச் சேர்ந்தவர்களே. இது பூரண சுயாட்சி அல்லது சுயாட்சி என்பதை இலக்காகக் கொண்டது. மேலும், இது 1931ஆம் ஆண்டின் டொனமூர் சீர்திருத்தங்களின் கீழ் (இது ஒரு அரைகுறை பொறுப்பாட்சியை வழங்கியது) உருவாக்கப்பட்ட அரசாங்க சபைக்கான தேர்தல்களை வடக்கில் பகிஷ்கரிக்குமாறு வேண்டுகோள் விடுத்தது.

இதில் அது வெற்றியும் கண்டது. டொனமூர் யாப்புக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் ஊர்வலங்கள் நடத்தப்பட்டன.[28] 1920களின் மத்தியிலிருந்து 1930களின் மத்தி வரை யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் தமிழ் இலக்கிய புனருத்தாரணத்தையும் ஆரம்பித்து வைத்தது. ஆகவே, இலங்கைத் தமிழரின் அரசியலை உயர்ந்தோர் குழாம் அரசியல் என்பதிலிருந்து முதலில் விலகச்செய்தது யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் என்பது தெரிகின்றது.

யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசின் அரசாங்க சபைக்கான தேர்தல் பகிஷ்கரிப்புக்கு முன்பு இலங்கைத் தமிழர் அரசியலில் நடந்த பாதகமான நடத்தை 1905இல் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சங்கமும் - இலங்கைச் சீர்திருத்த கழகமும் ஒன்றிணைந்து 1919இல் உருவாகிய இலங்கைத் தேசிய காங்கிரசிற்கு வழங்கிய ஆதரவாகும். வாக்குறுதிகளின் அடிப்படையிலேயே இலங்கைத் தமிழர்கள் ஒரு சமுதாயமாகச் சீர்திருத்த இயக்கத்திலும் காங்கிரசிலும் சேருமாறு தூண்டப்பட்டனர். ஆனால் 1918 டிசம்பரில் சேர். ஜேம்ஸ் பீரிசும், E.J. சமரவிக்கிரமவும் யாழ்ப்பாணச் சங்கத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாததால் அருணாசலம் உட்படத் தமிழ்த் தலைவர்கள் காங்கிரசில் இருந்து விலகி, தமிழர் சீர்திருத்தக் கழகம் என்ற அமைப்பை உருவாக்கினர். ஆகவே, 1921 செப்டெம்பர் மாதத்திலிருந்து இலங்கைத் தமிழர்களின் அரசியல் ஒரு புதிய கட்டத்தை அடைந்தது. அதாவது தமிழ்த் தலைவர்கள் தமக்கெனத் தனியான அரசியல் அமைப்புகளை உருவாக்கியமையாகும். இருந்தும் உயர்ந்தோர் குழாம் ஆக்கிரமிப்பு என்பது மேலும் தொடர்ந்தது. இப்போக்கின் சிறந்த உதாரணம் திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலம் ஆரம்பித்த அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஆகும்.

யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசின் பகிஷ்கரிப்புத் தோல்வி கண்டதன் பின்பு சில வருடங்களுக்குத் தமிழ் அரசியலிலும் தலைமைத்துவத்திலும் ஓர் இடைவெளி ஏற்பட்டது. ஆனால், பல்வேறு செல்வாக்கு மிக்க தனிப்பட்டவர்களும் சங்கங்களும் யாழ்ப்பாணத்தின் அரசியல் சிந்தனைகளை மாற்ற முற்பட்டனர். தமிழ் அரசியல் சூழ்நிலையில் ஏற்பட்ட மாற்றங்களை ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் வருகையானது செயல்முறைப்படுத்தக் கூடியதாய் மாற்றியது. டொனமூர் அரசாங்கசபையில் திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்தவராகியமை இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றில் ஒரு திருப்பு முனையானது.

1936க்கும் 1937க்கும் இடையில் பொன்னம்பலம் சம பிரதிநிதித்துவத்துக்கான சட்டத்தினை உருவாக்கினார்.

அரசாங்க சபையில் பொன்னம்பலம் ஆற்றிய உரையில் தான் ஏன் சமபிரதிநிதித்துவத்தைக் கோருகிறார் என்பதை மிகவும் தெளிவாக எடுத்துரைத்தார். 1940களில் இவர் யாழ்ப்பாணத்திலுள்ள பிரதான பழமை பேண் தமிழ் அரசியல் ஒழுங்கமைப்புகளின் ஆதரவினைப் பெற்றுக்கொண்டார். (உ- ம் : யாழ்ப்பாண சங்கம், அகில இலங்கை தமிழர் மகாநாடு.) இருந்தும் 1939இல் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் வெளியிட்ட ஒரு பிரசுரத்தில் (வகுப்பு வாதமா? தேசிய வாதமா? என்ற தலையங்கத்தில்) பொன்னம்பலத்தைக் காரசாரமாக கண்டித்திருந்தது. இப்பிரசுரம் ஐம்பதுக்கு ஐம்பது என்ற சுதந்திரம் சிறுபான்மையினரை பாதுகாக்காது என வாதிட்டது.[29] அத்தோடு மட்டக்களப்பின் இலங்கைத் தமிழர் பிரதிநிதியான ஈ.ஆர். தம்பிமுத்து அவர்களும் அதனை ஆதரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இருந்தும் மலேடுஸ்பீம்கருக்கான நியமன அங்கத்தவரான ஈ.பீ. ஜாஜகற்றன் பிரதிநிதியான இந்திய தமிழ் அங்கத்தவர் கோ. நடேச ஐயர் என்போர் ஐம்பதுக்கு ஐம்பதை ஆதரித்தனர். ஒரு புதிய யாப்பினைச் சிபார்சு செய்யவென 1944இல் இலங்கைக்கு வருகை தந்த சோல்பரி ஆணைக் குழுவினர் முன்பு திரு.ஜி.ஜி. பொன்னம்பலம் தனது கோரிக்கை சார்பாக திறமையாக வாதாடிய போதும் ஆணைக்குழு சம பிரதிநிதித்துவ கோரிக்கையை ஏற்காததால் ஜீ.ஜீ. பொன்னம்பலமும் அவரை ஆதரித்த இலங்கைத் தமிழர்களும் விரக்தி அடைந்தனர்.

## 5. சுதந்திர இலங்கையில் இலங்கைத் தமிழர்களின் அரசியல்

### அ. 1948 முதல் 1976 வரை

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் சோல்பரி ஆணைக்குழுவின் சிபார்சுகளையிட்டு விரக்தி அடைந்தபோதிலும் சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் நடந்த தேர்தலில் ஒன்பது தேர்தல் தொகுதிகளில் போட்டியிட்டு ஏழில் வெற்றியடைந்தது.

இத் தேர்தலில் வெற்றிபெற்று அரசாங்கம் அமைத்த ஐக்கிய தேசியக் கட்சி 1948இலும் 1949இலும் மூன்று குடியுரிமைச் சட்டங்களை நிறைவேற்றியது. இவை இலங்கையில் அப்போது வாழ்ந்த இந்திய வம்சாவளி மக்களுள் பெரும்பாலானோரின் குடியுரிமையையும், அதனால் வாக்குரிமையையும் இல்லாததாக்கியது. இந்த மசோதாக்கள் பாராளுமன்றத்தில்



கொண்டுவரப்பட்டபோது தமிழ்க் காங்கிரஸ் அவற்றை ஆதரித்தது. ஆனால், தமிழ்க் காங்கிரசின் முன்னணி அங்கத்தவர்கள் சிலர் எஸ்.ஜே.வீ. செல்வநாயகம் தலைமையில் இவற்றை எதிர்த்து வாக்களித்தனர். இவ்வாறு எதிர்த்து வாக்களித்த தலைவர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவுக்குமுகமாக தமிழ்க் காங்கிரசிலிருந்து இராஜினாமாச் செய்து இலங்கைத் தமிழரசுக் கட்சி என்ற அமைப்பினை உருவாக்கினர். சமஷ்டிக் கட்சி என அழைக்கப்பட்ட இக்கட்சி 1949ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி கொழும்பு மருதானையிலுள்ள அரசாங்க எழுதுவினைஞர் கட்டிடத்தில் அங்குரார்ப்பனம் செய்து வைக்கப்பட்டது. பின்வரும் நான்கு நோக்கங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட சமஷ்டிக் கட்சி 1972ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற அமைப்பில் இணையும் வரை இலங்கைத் தமிழர் அரசியலில் ஆக்கிரமிப்புச் செலுத்திய ஒரு கட்சியாக இருந்தது:

(1) தற்போதைய கெடுதலுண்டாக்கும் அரசியல் யாப்பினை நீக்கி சமஷ்டித் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட பகுத்தறிவு முறையானதும் ஜனநாயகமானதுமான ஓர் அரசியல் யாப்பினை உருவாக்குதல்.

(2) சிங்கள மொழியோடு தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்து வழங்குதல்.

(3) இந்திய தமிழ் மக்களுக்குப் பாராபட்சம் காட்டும் தற்போதையை குடியுரிமைச் சட்டத்தினை நீக்குதல்.

(4) பாரம்பரிய தமிழ்பேசும் பிரதேசங்களில் சிங்கள மக்களை குடியேற்றுதலை உடனடியாக நிறுத்துதல்.[30]

இக்கட்சியின் செயற்பாடுகள் இரண்டு விதங்களில் முக்கியத்துவம் பெற்றன :

(1) இலங்கைத் தமிழ் மக்களை அரசியல் ரீதியில் ஒன்றுதிரட்டுவதில் அது கணிசமான வெற்றி பெற்றமை.

(2) பாராளுமன்றத்துக்குப் புறம்பான போராட்டங்களின் ஊடாக உயர்ந்தோர் குழு அரசியலாக இருந்த இலங்கைத் தமிழர் அரசியலை வெகுஜன அரசியலாக்க முயற்சித்தமை.

### தமிழ் வாக்காளர்களை ஒன்றிணைத்தல்

சமஷ்டிக் கட்சி வட கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த தமிழர்களின் தேசிய உணர்வுகளை நோக்கியே தனது பிரச்சாரங்களை வழிநடத்தியது. சிங்களப் பிரதேசங்களில் வாழ்ந்த பொது சேவையாளர்கள், வர்த்தகம், உயர்தொழில் புரிந்தோர் சமஷ்டிக்கட்சியின் கொள்கைகளுக்கு ஆதரவளிக்கப் பின்நின்றமையை அது உணர்ந்தது. மேற்சொன்னோர் தமிழ் காங்கிரசின் கொள்கையான சிங்களத் தலைமைத்துவத்துடன் பொறுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ந்த ஒத்துழைப்பு என்பதையே விரும்பினர். அதனால் சமஷ்டிக் கட்சித் தலைமைத்துவம் தமிழர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களிலுள்ள கிராமப்புற சனத்தொகையின் மீது தமது கவனத்தைச் செலுத்தியது. இதனால் விவசாயிகள், சிறு வர்த்தகர்கள், தமிழ்ப் பாடசாலை ஆசிரியர்கள் போன்றோர் சமஷ்டிக் கட்சிக்கு ஆதரவாக விளங்கினர். ஆனால், இந்த நிலை இரு பிரதானக் கட்சிகளும் தமது மொழிக்கொள்கைகளை மாற்றியபோது மாற்றமடைந்தது. 1951இல் திரு எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவால் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சிங்களம் தமிழ் இரண்டும் அரச கரும மொழிகள் என்பதிலிருந்து சிங்களம் மட்டுமே அரச கருமமொழி என 1955இல் தனது கொள்கையை மாற்றிக் கொண்டது. ஐக்கிய தேசியக் கட்சியும் இதனைப் பின்பற்றிச் சிங்களம் மட்டும் என்பதே தனது கொள்கை எனப் பிரகடனப்படுத்தியது. இவற்றின் விளைவாக இவ்விரு கட்சிகளதும் பெரும்பான்மையான தமிழ் உறுப்பினர்கள் இக் கட்சிகளிலிருந்து இராஜினாமாச் செய்ததோடு தமது உரிமைகளைப் பாதுகாப்பதற்கு சமஷ்டிக் கட்சியினை நோக்கித் திரும்பினர். இதன் விளைவாகச் சமஷ்டிக் கட்சியின் ஆதரவுத்தளம் விரிவடைந்து தமிழ் பொது சேவை உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சிச் சபைகளின் அங்கத்தவர்கள், சிறு நில உடைமையாளர்கள், ஆங்கிலக் கல்வி பெற்ற தமிழ் அறிவு ஜீவிகள் என்போரது ஆதரவைப் பெற்றுக்கொண்டது. அதாவது அது தமிழ் மத்திய, கீழ் மத்திய வர்க்கத்தினரை தலைமை தாங்கும் ஒன்றாகியது.

இது 1956இல் இருந்து சமஷ்டிக் கட்சி பெற்ற தேர்தல் வெற்றிகளிலிருந்து புலனாகியது.

**சமஷ்டிக் கட்சியின் தேர்தல் பெறுபேறுகள்**

| தேர்தல் | வேட்பாளர் எண்ணிக்கை | பெற்ற ஆசனங்கள் | பெற்ற வாக்குகள் | வாக்கு விகிதாசாரம் |
|---|---|---|---|---|
| 1952 | 7 | 2 | 45,331 | 1.95 |
| 1956 | 14 | 10 | 1,42, 036 | 5.43 |
| 1960 மார்ச் | 19 | 15 | 1,76,492 | 5.75 |
| 1960 ஜுலை | 21 | 16 | 2,18753 | 7.19 |
| 1965 | 20 | 14 | 217966 | 5.37 |
| 1970 | 19 | 13 | 245747 | 4.90 |
| 1977 | 24 | 18 | 421488 | 6.25 |

Source : Department of Elections Registers of Parliament General Elections in Ceylon 1947-1970 (Colombo : Dept. of Government (1970); The Ceylon Daily News, Parliament of Sri Lanka 1977 (Colombo Lake House), P.41.



1956ஆம் ஆண்டுத் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் பாசாபெரமுன என்று அழைக்கப்பட்ட கட்சியும் சுயேட்சைவாதிகள் அடங்கிய ஒரு குழுவும் இணைந்து மக்கள் ஐக்கிய முன்னணி என்ற கூட்டமைப்பினை அமைத்துத் தேர்தலில் போட்டியிட்டு அமோக வெற்றியீட்டி அரசாங்கத்தினை அமைத்துக்கொண்டது. அது வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றினை நிறைவேற்றுமுகமாக முதலில் சிங்களத்தை மாத்திரம் தனியொரு உத்தியோக மொழியாக்கும் ஒரு மசோதாவினைப் பாராளுமன்றத்தில் கொண்டு வந்தது. இம் மசோதா கொண்டு வரப்பட்ட தினத்தன்று சமஷ்டிக் கட்சி பாராளுமன்றத்துக்கு அருகிலுள்ள காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகத்தை நடத்தியது. காலை 8.30 மணிக்கு ஆரம்பித்த சத்தியாக்கிரகப் போரட்டம் பிற்பகல் 1.30 மணி வரையும் இடம்பெற்றது. பின்னர், பொலிஸ் உத்தியோகத்தர்களின் வேண்டுகோளின் பேரில் அதனைக் கைவிட்டது. மகாத்மா காந்தி பின்பற்றிய சத்தியாக்கிரக அடிப்படையில் இப்போராட்டம் நடத்தப்பட்டபோதும் சிங்களக் காடையர்கள் தனியே சத்தியாக்கிரகிகளைத் தாக்கியதோடு மாத்திரமல்ல கொழும்பிலுள்ள தமிழர்களையும் கிழக்கு மாகாணத்திலிருந்த கல்லோயா திட்டத்தில் வாழ்ந்த தமிழர்களையும் தாக்கினர். மேற்சொன்ன சத்தியாக்கிரகப் போராட்டம் எதிர்பார்த்த முடிவுகளைத் தராததால் சமஷ்டிக்கட்சி 1956இல் பாராளுமன்றத்துக்கு புறம்பான ஒரு சாத்வீக சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பிக்கப்போவதாகவும் அதற்கென ஒரு காலக்கெடு ஒன்றினையும் அறிவித்தது. இச் சத்தியாக்கிரகத்துக்கான திகதி நெருங்கி வந்தபோது பிரதம மந்திரி எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா இச் சத்தியாக்கிரகத்தினை நடத்துவது பற்றிய தீர்க்கமான முடிவினையும் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் கருத்திற்கொண்டு சமஷ்டிக் கட்சித் தலைவர்களை ஒரு சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தார்.

இப்பேச்சு வார்த்தைகள் 1957ஆம் ஆண்டு யூலை மாதம் 27ஆம் திகதி ஓர் ஒப்பந்தத்திற்கு வழிவகுத்தது. அது பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் என அழைக்கப்பட்டது.

ஆனால், இந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இவ் ஒப்பந்தத்துக்கு எதிரான சிங்கள தீவிரவாதிகள், குறிப்பாகப் பௌத்த பிக்குமார்கள் எதிர்ப்பியக்கங்களில் ஈடுபட்டனர். பௌத்த குருமார்கள் ஊர்வலமாகச் சென்று பிரதமரின் தனிப்பட்ட வாசஸ்தலத்தில் ஒப்பந்தம் கிளித்தெறியும்வரை சத்தியாக்கிரகம் செய்தனர். அதனால், பிரதமர் ஒப்பந்தத்தை அவர்கள் முன் கிளித்தெறிந்தார். திரு. எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்காவின் மரணத்தின் பின்பு 1960ஆம் ஆண்டு யூலை மாதம் நடந்த பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஒரு புதிய அரசாங்கத்தை அமைத்தார். இவர் உத்தியோக மொழிக் கொள்கையினை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தார். இதனை எதிர்த்து சமஷ்டிக் கட்சி பொதுமக்களை அடிப்படையாகக் கொண்ட சாத்வீக நேரடி இயக்கம் ஒன்றை ஆரம்பித்தது. இந் நடவடிக்கைகளின்போது சமஷ்டிக் கட்சி, அரசாங்க செயலகங்களான கச்சேரிகளின் செயற்பாட்டினைத் தடுக்கும் நோக்குடன் வடகிழ் மாகாணங்களில் கச்சேரிகளின்முன் சத்தியாக்கிரகம் செய்தது. இதன்மூலம் அரசாங்க செயலகங்களின் நடவடிக்கையைச் செயலிழக்கச் செய்தது. ஒரு மாதமும் 28 நாட்களும் நடைபெற்ற இச் சத்தியாக்கிரகத்தினை அரசாங்கம் இராணுவத்தினரைப் பயன்படுத்தி வன்முறையால் அடக்கியது.

இவ்வாறு சமஷ்டிக் கட்சி தனது சாத்வீகப் போராட்டங்களின் ஊடாக உயர்ந்தோர் குழாம் அரசியலாக இருந்த இலங்கைத் தமிழர் அரசியலை வெகுஜன அரசியலாக்க முயற்சித்தது.

இருந்த போதிலும் இக்கட்சி தனது நோக்கங்களை அடைவதில் வெற்றி பெறவில்லை. மேலும், 1970ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் வெற்றி பெற்ற ஐக்கிய முன்னணி ஒரு புதிய அரசாங்கத்தினை அமைத்ததோடு 1972ஆம் ஆண்டு புதியதொரு குடியரசு யாப்பினையும் அறிமுகப்படுத்தியது.

இந்த யாப்புக்குச் சமஷ்டிக் கட்சி முன் வைத்த திருத்தங்கள் எதனையும் அரசு கவனத்துள் எடுக்கவில்லை. இதனால் விரக்தி அடைந்த சமஷ்டிக் கட்சி இந்த யாப்புக்கு ஒற்றுமையான எதிர்ப்புக் காட்டுவதற்காக தமிழ் காங்கிரஸ், ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி, தமிழ் எழுது வினைஞர் சங்கம் என்பவற்றை இணைத்து தமிழர் கூட்டணி என்ற அமைப்பினை உருவாக்கியது. 1972ஆம் ஆண்டின் யாப்பினைத் திருத்துமாறு விடுத்த வேண்டுகோள்களில் தமிழர் கூட்டணி தோல்வி கண்டதால் 1974இல் அதன் பெயரினைத் தமிழர் விடுதலைக் கூட்டணி என்று மாற்றியதோடு 1976இல் அதன் இரண்டாவது வருடாந்த மகாநாட்டில் பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியது :

"இந் நாட்டில் தமிழ்த் தேசியத்தின் தொடர்ந்திருத்தலை பாதுகாப்பதற்காக ஒவ்வொரு தேசத்தவரோடும் உடன்பிறந்த சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமான, இறைமையுடைய, மத சார்பற்ற சோசலிச தமிழ் ஈழத்தினைப் புனர்நிர்மாணம் செய்வதும் மீள அமைப்பதும் தவிர்க்க முடியாதது."[31] 1976ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி தேசிய அரசுப் பேரவையில் உரையாற்றும்போது திரு. செல்வநாயகம் அவர்கள் "நாங்கள் சமஷ்டி யாப்புக்கான கோரிக்கையை கைவிட்டுவிட்டோம். எமது இயக்கம் முழுமையாகச் சாத்வீகமானது. எமக்குத் தெரியும் சிங்கள மக்கள் எமது கோரிக்கையினை வழங்குவார்கள். எமது தீவின் மற்றைய பகுதிகளிலிருந்து தனியான ஓர் அரசினை உருவாக்குவோம்" என்றார்.[32]



## ஆ. 1976 தொடக்கம் சமகாலம் வரை

ஈழம் என்ற தனியான தமிழ் அரசே தமது கோரிக்கை என மிதவாதக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பிரகடனப்படுத்தியமையும் அதற்குத் தமிழ்த் தீவிரவாதக் குழுக்கள் வழங்கிய ஆதரவும் இலங்கையின் அரசியல் யாப்பில் ஒற்றையாட்சி இயல்பை மாத்திரமன்றி தீவின் ஆள்புல ஒற்றுமைக்கும் சவால் விடுத்தது.

இக் கோரிக்கையானது தனியே இலங்கைத் தமிழர்களின் அரசியலில் மாத்திரமல்லாது இலங்கையின் அரசியலிலும் பல பார தூர மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளமையாலும் அது பற்றி ஏற்கனவே பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையாலும் இவ்விடத்தில் அது பற்றி மிகவும் சுருக்கமாக நோக்குதலே பொருத்தமானதாகும்.

1977ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தமது தேர்தல் பிரச்சாரத்தின்போது சுதந்திரமான ஒரு தமிழ் ஈழத்தை உருவாக்குவதற்கான அனுமதியைத் தமிழ் மக்களிடமிருந்து கோரியது. அத்தேர்தலில் வட மாகாணத்தில் எல்லாத் தொகுதிகளிலும், கிழக்கு மாகாணத்தில் தமிழர் பெரும்பான்மையாக வாழும் தொகுதிகளிலும் வெற்றிபெற்றதோடு பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியாகியது. எதிர்க்கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி பின்பற்றிய உபாயம் தமது நோக்கங்களை அதாவது தமிழ் ஈழம் அமைப்பதற்குச் சாதகமான பொதுவான அபிப்பிராயத்தை உருவாக்குவதாகும். இதனை மனதிற்கொண்டு இலங்கையிலும் வெளிநாடுகளிலும் அது பிரசாரம் செய்து வந்தது.

ஆனால், பாராளுமன்றத்தில் தான் வழங்கிய வாக்குறுதிக்கும் யதார்த்தத்திற்கும் இடைவெளி இருப்பதைக் கண்டது. இக் கட்டத்திலும் தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியல் யாப்பு வழிகளினூடாகத் தமது நோக்கினை அடைந்து கொள்ளலாம் என்று நம்பியது. ஆனால், தமிழர்களுள் தீவிரத்தன்மை கொண்ட ஒரு பகுதியினர் பேச்சுவார்த்தை அரசியல் பயனற்றது, அதாவது பேச்சுவார்த்தையினூடாகப் பிரிவினையை அடைவது கற்பனையானது எனக் கொண்டனர். தமிழர் விடுதலைக் கூட்டணி எந்த விதமான தீவிர நடத்தைத் திட்டமும் இன்றிப் பாராளுமன்றமே தஞ்சமாக இருந்ததால் தமிழ் இளைஞர்கள் பொறுமையிழந்ததோடு தமிழர் விடுதலைக் கூட்டணியின் மிதவாத தலைமைத்துவத்தை கண்டிக்கத் தொடங்கினர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளைஞர் பிரிவும் எழுச்சி பெற்று வந்த தீவிரவாதக்குழுக்களும் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றப் பாதையை நிராகரிக்க வேண்டும் எனவும் அதற்குத் தமிழர் விடுதலை பற்றிய எந்தவித தெளிவான தூரநோக்கும் இல்லை என்றும் வலியுறுத்தினர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைகள் பற்றி அதிருப்தியடைந்த இவர்கள் ஆயுதப்போராட்டத்தின் மூலம் தனியானதொரு தமிழ் அரசினை உருவாக்குவதுதான் ஒரே ஒரு வழி என நம்பினர். அதனால், அரசியல் பிரக்ஞையுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இளைஞர்கள் ஒன்று சேர்ந்து தமிழ் மாணவர் பேரவை ஒன்றை அமைத்தனர். அது அப்போதைய ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பல்கலைக்கழக அனுமதிக் கொள்கைக்கு எதிராக 1970 நவம்பர் மாதம் 4ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஒரு எதிர்ப்பு ஊர்வலம் நடத்தியது. இதில் கிட்டத்தட்ட பத்தாயிரம் மாணவர்கள் கலந்து கொண்டனர்.[33]

1970களின் பிற்பகுதியில் இது மிகவும் செயற்பாடுடையதாக மாறி, மரபு ரீதியான தமிழ் அரசியல் ஒழுங்கமைப்புக்கு ஒரு மாற்று அரசியல் சக்தியாக மாறக்கூடிய வழிமுறைகளைக் காட்டியது.

மாவட்ட அபிவிருத்தி சபைகள் திட்டத்தினைத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்றுக்கொண்டமையே தமிழர் அரசியலில் திருப்பு முனையாகியது. தனியே தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளைஞர் அணி வீழ்ச்சியடைந்த-தோடு மாத்திரமல்ல பொதுவாகவே தமிழ் இளைஞர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியை வெளிப்படையாக எதிர்த்தனர். தமிழ் மாணவர் பேரவையை விட்டு வெளியேறிய ஓர் இளைஞர் குழு தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தை ஆரம்பித்தது. இதனைத் தொடர்ந்து மற்றும் நான்கு பிரதான தமிழ்த் தீவிரவாதக் குழுக்களும் உருவாக்கப்பட்டன. அவை தமிழீழ விடுதலைப் புலிகள், ஈழப் புரட்சிகர மாணவர் ஒழுங்கமைப்பு, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலை ஒழுங்கமைப்பு. இவை இலங்கையின் ஆயுதப்படைக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டன.

1987ஆம் ஆண்டில் இடம் பெற்ற இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் நான்கு பிரதான தமிழ்த் தீவிரவாத இயக்கங்கள் ஆயுதப் போராட்-டத்தைக் கைவிட்டுவிட விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் ஆயுதப் போராட்-டத்தை நடத்தி வருகிறார்கள்.

## இலங்கைத் தமிழர்களின் அரசியலில் இடதுசாரித் தமிழ் தலைவர்களின் பங்கு

ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் இலங்கைக்கு சுதந்திரம் பெறுதல், சோசலிச சமுதாயத்தை உருவாக்குதல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டும் 1935இல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கையின் முதலாவது கட்சி இலங்கை சமசமாஜக் கட்சியாகும். அக்கட்சியின் ரொக்சிசவாதக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாத மாக்சிஸ்டுகளான வைத்திய கலாநிதி எஸ்.ஏ. விக்கிரமசிங்க, பீற்றர் கெனமன், எம்.ஜி. மென்டிஸ் என்போர் சமசமாஜக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதால் அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியை ஆரம்பித்துப் பணியாற்றத் தொடங்கினர். கொழும்பிலும் அதன் புற நகரங்களிலும் வேர் விடத் தொடங்கிய கம்யூனிஸ்ட் கட்சி யாழ்ப்பாணத்திலும் கிளையொன்றை ஆரம்பித்து இயங்கத் தொடங்கியது. தோழர்கள் அ. வைத்திலிங்கம், மு. கார்த்திகேசன், எஸ். இராமசாமி ஐயர், எம்.சி. சுப்பிரமணியம் போன்றோர் இப்பணியை முன்னெடுத்துச் சென்றனர்.



ஆரம்ப காலத்தில் இவர்களது கட்சிப் பிரசாரம் மதிற் சுவர்கள் மூலமாகவே ஆரம்பித்தது. சுவரொட்டிகள் அடிப்பதற்கு பண வசதி இல்லாத-தால் சுலோகங்களைத் தாள்களில் எழுதிச் சுவர்களில் ஒட்டினர். கார்த்தி-கேசன், இராமசாமி ஐயர், எம்.சி. சுப்பிரமணியம் என்பவர்களுடன் சேர்ந்து அரசடி இராசையா, டானியல், டொமினிக் ஜீவா, நீர்வை பொன்னம்பலம் போன்ற வயதிற் குறைந்த இளைஞர்களும் இப்பணியில் ஈடுபட்டனர்.

1947ஆம் ஆண்டில் நடந்த முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் பருத்தித்துறைத் தொகுதியில் சகல மக்களாலும் "ஜெயம்" என்று அன்பாக அழைக்கப்பட்ட இளம் சட்டத்தரணி சி. தர்மகுலசிங்கம் போட்டியிட்டார். தேர்தலில் அவர் தோல்வியடைந்தாலும் பரவலாக அதிக வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்துக்கு வந்தார். இவர் இலங்கை சமசமாஜக் கட்சியின் சார்பிலேயே போட்டியிட்டார். தர்மகுலசிங்கம் பரவலாகப் பெற்ற ஆதரவு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர்களையும் செயலாற்றத் தூண்டியது. முதலாவது பாராளுமன்றத் தேர்தல் முடிந்த அடுத்த ஆண்டு யாழ்ப்பாண நகரசபைத் தேர்தல் நடைபெற்றது. எம்.சி. சுப்பிரமணியம் அத்தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகராகப் போட்டியிட்டார். எம்.சி. சுப்பிரமணியம் இத்தேர்தலில் வெற்றியடையவில்லை.

1962ஆம் ஆண்டளவில் சர்வதேச மட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி பிளவுண்டது. இலங்கையில் பீற்றர் கெனமன் தலைமையில் கம்யூனிஸ்ட் மொஸ்கோ சார்பு தொடர்ந்தது. புரட்சி வேகங் கொண்ட இளம் தலை-முறையினர் பெரும்பாலானோர் சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து பணியாற்றினர். முன்னர் தொடங்கி பிசுபிசுத்த நிலையிலிருந்த தாழ்த்தப்பட்ட மக்களின் ஆலயப் பிரவேசப் போராட்டம், பாடசாலைப் பிரவேசம், தேநீர்க் கடைப் பிரவேசம் போன்ற போராட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன. பன்றித் தலைச்சி அம்மன் கோவில் போராட்டம், சங்கானைப் போராட்டம், தேநீர்க் கடைப் பிரவேசம் போன்றவை வெற்றிகளை ஈட்டிக் கொடுத்தன.

1968இல் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரப் போராட்டம் நடைபெற்றது. பிரபல்யம் வாய்ந்த கணித மேதையும் அரசியல்வாதியுமான சி. சுந்தரலிங்கம் தனது ஆதரவாளர்களுடன் தாழ்த்தப்பட்டோர் கோயிலினுள் நுழைவதைத் தடுத்தார். மாவிட்டபுரம் உடனடியாகத் திறந்துவிடப்பட்டாலும் அடுத்த ஆண்டில் அது சகலருக்கும் திறந்துவிடப்பட்டது.

திரு. பொன் கந்தையா பருத்தித்துறைத் தொகுதியில் 1952இல் போட்டியிட்டுத் தோற்றாலும் 1956இல் அமோக வெற்றியீட்டினார். தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு இடதுசாரிப் பாராளுமன்ற உறுப்பினர் இவராவார். தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் புதிய கண்ணோட்-டத்தில் பார்த்ததுடன் சிறுபான்மைத் தமிழர்களின் விடிவுக்கும் குரல் கொடுத்தவர். பலராலும் பாராட்டப்பட்டவர். தாழ்த்தப்பட்ட சிறுவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகப் பாடசாலைகளில் அவர்களையும் அனுமதிக்க வேண்டுமென்று கோரியவேளை 1960களில் கல்வி அமைச்சராக இருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டபிள்யூ. தகநாயக்காவின் உதவியினால் தாழ்த்தப்பட்ட பிள்ளைகள் படிப்பதற்கென வசதியற்ற பகுதிகளில் 11 பாடசாலைகளைத் தொடக்கி வைத்தார். பொன் கந்தையாவைத் தொடர்ந்து "சண்" என அன்புடன் அழைக்கப்பட்ட நாகலிங்கம் சண்முகதாசன் இலங்கையில் மாஓசேதுங் சிந்தனையின் ஊற்றுக் கண்ணாக விளங்கியவர். வடக்கிலே சாதிப்பாகு-பாட்டில் ஊறித் திளைத்த இந்து சமூகத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினருக்குக் கோவில்களின் கதவுகள் மாத்திரமல்ல பொது இடங்களின் கதவுகளும் மூடப்பட்ட வேளையில் "உயர்சாதி இந்துவான" சண்முகதாசன்தான் அந்த மக்களைக் கோவில்கள் நோக்கி படையெடுக்கச் செய்தார். உயர் சாதியினரின் கொத்தளங்களுக்குள்ளிருந்தே தீண்டாமைக்கு எதிரான கிளர்ச்சியை வழிநடத்தியவர் சண்முகதாசன்.

சண்முகதாசன் தலைமை தாங்கிய சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சி தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் என்ற பெயரில் ஓர் அமைப்பினை உருவாக்கி, அந்த அமைப்பில் தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமல்ல, சமூக மாற்றத்தில் ஆர்வங்கொண்ட சகல மக்களையும் ஒன்றிணையச் செய்து, மாவிட்டபுரம் கோயிலைத் திறக்கச் செய்தது மட்டுமல்ல அந்தப் போராட்ட இயக்கமே தேநீர்க்கடைப் பிரவேசம், சுடுகாட்டுரிமை போன்ற மனித உரிமைப் போர்களிலும் வெற்றியீட்ட வைத்தது.

# IV

# முடிவுரை

இவ்வாய்வு இலங்கைத் தமிழர்களின் அரசியலை விளங்கிக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டதாகும். அதனை விளங்கிக் கொள்வதற்கு அரசியல் சமூகவியல் கோட்பாடு குறிப்பாக, உயர்ந்தோர் குழாம் என்ற எண்ணக்கரு பயன்படுத்தப்பட்டது. உயர்ந்தோர் குழாம் எண்ணக்கருவின் அடிப்படையில் நின்று பார்க்கும்போது இலங்கைத் தமிழர்களின் அரசியல் யாழ்ப்பாண இராச்சியக் காலத்திலிருந்து குறிப்பிட்ட குழுவினரால் ஆக்கிரமிக்கப்பட்டு வந்துள்ளதெனக் காண்கிறோம். அதாவது சாதியில் உயர்ந்த வேளாளர்களே அரசியல் ரீதியில் பிரதானமான பதவிகளை வகித்து வந்துள்ளார்கள். இந்நிலை போர்த்துக்கேயர், டச்சுக்காரர் ஆட்சிக்காலப் பகுதிகளிலும் தொடர்ந்தது. பிரித்தானியர் ஆட்சியின்போது இது மிகவும் தெளிவாகியது. இலங்கைத் தமிழர்களுக்குள்ளேயும் யாழ்ப்பாணத் தமிழர்களும் அவர்களிலும் வேளாளர் சாதியமைப்பை சேர்ந்த, நிலவுடைமை, ஆங்கிலக் கல்வி என்பவற்றைப் பெற்றுக்கொண்டவர்களே அரசியலிலும் ஆக்கிரமிப்புச் செலுத்த முடிந்தது. இப் போக்கில் முதன் முதலில் மாற்றங்களை ஏற்படுத்தியோர் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் காரர்கள் ஆவர். இவர்கள் தனியே பிரித்தானியரோடு ஒத்துழைத்தது மாத்திரமல்லாது உயர்ந்தோர் குழாம் அரசியலிலிருந்து மக்களைப் பங்கு பெறச் செய்வதிலும் மாற்றம் ஏற்படுத்தினர். சுதந்திரத்தின் பின்னர் 1949இல் ஆரம்பிக்கப்பட்ட சமஷ்டிக் கட்சியும் தனது ஒன்று திரட்டுதல் நடவடிக்கையாலும், பின்னர் சாத்வீக ரீதியிலான சத்தியாக்கிரக நடவடிக்கையாலும், 1960களில் நடத்திய வெகுஜனங்களை அடிப்படையாகக் கொண்ட நேரடி சாத்வீகப் போராட்டங்களினாலும் உயர்ந்தோர் குழு அரசியலைப் பொதுஜன அரசியலாக்க முயற்சித்தது. ஆனால், உண்மையில் மாணவர் பேரவையே இலங்கைத் தமிழர்களின் அரசியலில் தாக்கமான முறையில் வெகுஜனப் போராட்டங்களை 1970களின் ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தியது. அதன் பின்னர் இலங்கைத் தமிழர் அரசியல் ஆயுதப் போராட்டமாகவும், தனிநாட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டதாகவும் மாறியது. இம் மாற்றத்துக்கான காரணங்களைக் கண்டறிய வேண்டுமாயின் அதற்கான தனியான ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

இறுதியாக எமது எடுகோளினைப் பரிசீலனை செய்யும்போது மிகவும் அண்மைக்காலம் வரை அதாவது தமிழ்த் தீவிரவாதக் குழுக்கள் இலங்கைத் தமிழர் அரசியலைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும்வரை வேளாள உயர்ந்தோர் குழாமே இலங்கைத் தமிழர்களின், குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்களின் அரசியலை ஆக்கிரமித்து வந்துள்ளது என்பது தெளிவாகிறது. ஆனால், கிழக்கு மாகாணத் தமிழர்களின் அரசியலை முக்குவர் ஆக்கிரமித்ததற்கான சான்றுகள் இல்லை.

## குறிப்புகள்


1. கா. சிவத்தம்பி, "இலங்கைத் தமிழரது சமூகக் கட்டமைவிற் சில அம்சங்கள்," இலங்கையில் இனத்துவமும் சமூக மாற்றங்களும், தொகுப்பு, கொழும்பு சமூக விஞ்ஞானிகள் சங்கம், 1985, ப. 199.
2. *மேற்படி*, ப. 200
3. கா. சிவத்தம்பி, இலங்கைத் தமிழர் யார் எவர்? (கொழும்பு: கொழும்புத் தமிழ்ச் சங்கம், 2000), ப. 19.
4. *மேற்படி*, ப. 19.
5. Michael Rugh, Politics and Society (New York : Harvester wheat sheaf, 1998), P. 12.
6. *Ibid.*, P. 13.
7. *Ibid.*, P.14.
8. Thom Kerstiens, The New Elite in Asia and Africa (New York : Fedivcke A Praeger Publishers,1966), P. 4.
9. *Ibid.*, P. 6.
10. *Ibid.*, P. 12.
11. S. Arasaratnam, Ceylon (New Jersey : Printice Hall, 1964), P.106.
12. *Ibid.*, P. 108.
13. O.M. de. Silva Cosme, Fidalgoes in The Kingdom of Jaffna patnam (Colombo : Harwoods Publishers, 1994), P. 46.
14. *Ibid.*, P. 47.
15. S. Arasaratnam, Dutch Power in Ceylon 1658-1687 (Amsterdam: Djambatava, 1958), P.122.
16. *Ibid.*, P. 123.
17. Murugar Gunasingam, Sri Lankan Tamil Nationalism; A study of its Origins (Sydney : M.V. Publications, 1999), P. 168.
18. Quoted by M. Gunasingham, *op. cit.*, P. 169.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. M.Gunasingam, *op. cit.*, P. 178.

20. A. Jayaratnam Wilson, Sri Lankan Tamil Nationalism (London: Hurgh & Company, 1999), P. 42.

21. *Ibid.*, P. 43.

22. *Ibid.*, P. 44.

23. M. Gunasingam, *op. cit.*, P. 60.

24. M. Gunasingam, *op cit.*, P. 61.

25. Quoted by M. Gunasingam, *op. cit.*, P. 61.

26. M. Gunasingam, *op. cit.*, P.61.

27. *Ibid.*, P. 61.
Youth Congress Jaffna, Communalism or Nationalism (Chunnakam: Thirumagal Press, 1939), P.7.

28. A. Jayaratnam Wilson, *op. cit.*, P. 60.

29. See youth Congress, Jaffna, Communalism or Nationalism, *op.cit.*,

30. The case for a federal Constitution of Ceylon, Resolution Passed at the Illankai Tamil Arasu Kadchi (Colombo: Illankai Tamil Arasu Kadchi, 1981), P. 9.

31. Tamil United Liberation Front, Resolution Passed at a convention of the Tamil United front held in Pannakam Vaddukoddai on 14th May 1976.

32. Suthanthiran, May 1977.

33. A. Sivarajah, "The Rise of Militancy in Tamil Politics," Ed. Malinda Wealie & P.V.J. Jayasuren, Security Delemma of a small State (New Delhi : South Asian Publishers, 1995), P. 125.

34. ஏ.எஸ். பாலசிங்கம், தமிழ் விடுதலைப் போராட்டம் (கொழும்பு : தொழிலாளர் பாதை), 1980, ப. III.

## உசாத்துணை நூல்கள்


1. Arasaratnam, S. *Ceylon,* (New Jersy : Printice Hall, 1964.)

2. Arasaratnam, S. *Dutch Power in Ceylon 1458-1687* (Amsterdam Dfembatam, 1958.)

3. Bryan P. faftenberger *caste in Tamil Culture : The Religious Foundations of Sudra Domination in Tamil Sri Lanka* (New Delhi :Vikas Publishing House Pvt Ltd, 1982.)

4. Jane Russell, *Communal Politics Under the Donoughmore Constitutions 1931-1947* (Dehiwala :Tisera Pratesakayo Ltd, 1982.)

5. Murugar Gunasingam, *Sri Lankan Tamil Nationalism: A Study of its Origins* (Sydney: M.V. Publications, 1999.)

6. Michael Roberts, Sri Lanka Collective Indentities Revisited Volume I (Colombo: Marga Institute, 1997.)

7. Michael Rugh, *Politics and Society* (New York : Harvester Wheat Sheaf, 1998.)

8. Pathmanathan, S. *The Kingdom of Jaffna* (Colombo : Arul M. Rajendran, 1978.)

9. Sankaran Krishna, *Post Colonial for Securities* (New Delhi : Oxford University Press, 2000.)

10. Sivarajah, A. *Politics of Tamil Nationalism in Sri Lanka* (New Delhi : South Asian Publishers, 1966.)

11. Sivarajah, A. *Politics of Tamil Nationalism in Sri Lanka* (New Delhi : South Asian Publishers, 1996.)

12. Thomas Kesatiens, *The New Elite in Asia and Africa* (New York: Fredenich of Praeges Publishers, 1996.)

13. Wilson, A.W. *S.J.V. Chelvanayakam and the Crisis of Sri Lankan Tamil Nationalism: A Political Geography* (London : Hurst & Company, 1994.)

14. Wilson, A.W. *Sri Lankan Tamil Nationalism: Its origin and Development in the Nineteenth and Twentieth Centuries* (London: Hurst & Company, 1999.)

15. Werakeeds, M. Jayasekera, P.V.J., *Security Dilemma of a small state, Part two* (New Delhi : South Asian Publishers Ltd, 1995.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. Youth Congress, *Jaffna Communalism or Nationalism* (Chunnakam : Thirumagal Press, 1939.)

17. சிவத்தம்பி, கா. *இலங்கைத் தமிழர் யார்? எவர்?* (கொழும்பு : கொழும்புத் தமிழ்ச் சங்கம், 2000)

18. சிவத்தம்பி, கா. *"இலங்கைத் தமிழரது சமூகக் கட்டமைவின் சில அம்சங்கள்,"* இலங்கையில் இனத்துவமும் சமூக மாற்றங்களும் (கொழும்பு, சமூக விஞ்ஞானிகள் சங்கம், 1985.)

19. பாலசிங்கம், ஏ.எஸ். *தமிழ் விடுதலைப் போராட்டம்* (கொழும்பு: லக்ஷ்மன் பிரிண்டர்ஸ், 1980)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org